MCOP 23/2017

ம.சா.1 மாரிமுத்து த/பெ ஆறுமுகம்

நாள் 06.02.2025

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என் மகனுக்கு ஏற்பட்ட விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றி கேள்விப்பட்டு நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த மறுநாள் தான் நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்து விபத்து பற்றி தெரிந்து கொண்டு அதன்பின்னர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. ம.சா.ஆ2 முதல் தகவல் அறிக்கையில் சபாபதிக்கு சொந்தமான TN25 AS5477 என்ற டிராக்டரில் இடது புறம் மறவன் உட்கார்ந்து வந்தபோது வித்துவான் தாங்கல் ஆறுமுகம் என்பவர்க்கு சொந்தமான நிலத்திற்கு போக ரோட்டில் சென்ற போது சபாபதி டிராக்டரை வேகமாகவும் அஜாக்கரதையாகவும் ஓட்டியதால் டிராக்டரில் இடது பக்கம் உட்கார்ந்திருந்த எனது மகன் மறவன் நிலை தடுமாறு கீழே விழுந்து டிராக்டரில் இடது பக்க சக்கரத்தில் மாட்டிக்கொண்டு என் மகன் தலைமீது பின்சக்கரம் ஏறி இறங்கியதால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது டிராக்டர் மட்டும் தான் இருந்தது என்றும் அங்கு டிரெய்லர் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு 2 மகன்கள் என்றும் அதில் 3வது மனுதாரர் மனோஜ்குமார் என் மூத்த மகன் என்றால் சரிதான். விபத்தில் இறந்த மறவன் என் 2வது மகன் என்றால் சரிதான். 2வது மனுதாரர் வெண்ணிலா என் மனைவி என்றால் சரிதான். 4ம் மனுதாரர் கலைமகள் என் மகள் என்றால் சரிதான்.

4. விபத்தில் இறந்த மறவன் திருமணம் ஆகாதவர் என்றால் சரிதான். விபத்தில் இறந்த மறவனுக்கு சட்டப்படியான வாரிசு 2ம் மனுதாரர் மட்டும் தான் என்றும் நானும் மற்ற மனுதாரர்களும் மறவனின் சட்டப்படியான வாரிசுகள் அல்ல என்றும் மறவனை சார்ந்து வாழ்ந்தவர்கள் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

5. விபத்தில் இறந்த மறவனின் பிறந்த தேதி 14.02.1997 என்றால் சரிதான். மறவன் விபத்து சமயத்தில் டிராக்டரில் மட்காடில் உட்கார்ந்து சென்ற போது தான் விபத்து ஏற்பட்டு இறந்து போனார் என்றால் சரிதான். சட்டப்படியும் விதிகளின்படியும் பாலிசி நிபந்தனைபடியும் டிராக்டரில் ஓட்டுநர் ஒருவர் தான் பயணம் செய்ய முடியும் என்றும் விதிமீறலால் மறவன் டிராக்டரில் பயணம் செய்ததால் ஏற்பட்ட விபத்திற்கு பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ5 டிராக்டரின் பதிவு சான்றிலும் டிராக்டரின் இருக்கை வசதி ஒரு நபருக்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஓட்டுநர் தவிர மட்காடில் இரண்டு பேர் உட்கார்ந்து செல்லலாம். மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகள் மற்றும் பாலிசி நிபந்தனையின் படி விதியை மீறி என் மகன் டிராக்டரில் மட்காடில் உட்கார்ந்து பயணம் செய்து ஏற்பட்ட விபத்திற்கு இரண்டாம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் எந்த விதத்திலும் பொறுப்பேற்க முடியாது என்றும் டிராக்டர் உரிமையாளர் தான் பொறுப்பேற்க வேண்டும் என்றால் சரியல்ல.

7. என் மகன் விபத்தில் இறந்த சமயத்தில் என் மகனின் வயது, தொழில் மற்றும் வருமானம் குறித்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் மகன் விபத்து சமயத்தில் கிளினராக வேலை செய்து மாதம் ரூ.12,000/- வருமானம் ஈட்டியதாக சொல்வது

பொய் என்றால் சரியல்ல.  இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.